அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல : 30/99

எனது இல 1/543ச/1/23/95
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07.
1999.12.16 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச்
செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

இலங்கை தொழில்நுட்பசேவை வகுப்பு 1 மற்றும் விசேட வகுப்பின் சம்பளங்களை மீளமைத்தலும் 1994.07.25 ஆந் திகதிய 27/94 ஆம் 27/94(1) ஆம் இலக்கங்கள் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின் மூலம் நடுத்தர ஒன்றிணைக்கப்பட்ட தொழில்நுட்ப சேவையை மீளமைக்கும் போது ஏற்பட்ட சம்பள முரண்பாடுகளை அகற்றுதலும்.

---

நடுத்தர ஒன்றிணைக்கப்பட்ட தொழில்நுட்ப சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை இலங்கை தொழில்நுட்பச் சேவைக்கு உள்ளீர்க்கும் போது சம்பள அளவுத் திட்டங்களில் ஏற்பட்ட முரண்பாடுகளை அகற்றுவதற்காக வகுப்பு 1 இனதும் விசேட தரத்தினதும் சம்பள அளவுத் திட்டங்கள் 1994.07.01 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் பின்வருமாறு மீளமைக்கப்படுகிறது.

இலங்கை தொழில்நுட்பசேவை வகுப்பு 1, 48720-8×1200-10×1560-73920

இலங்கை தொழில்நுட்பசேவை விசேடவகுப்பு 52320-15×1560-75720

02. 1994.07.25 ஆந் திகதிய 27/94 ஆம் 27/94(1) ஆம் இலக்கங்களைக் கொண்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் நடுத்தர ஒன்றிணைக்கப்பட்ட தொழில்நுட்ப சேவைக்குப் பதிலாக இலங்கை தொழில்நுட்பச் சேவையை உருவாக்கும் போது, அத்திகதியில் சேவையிலிருந்த உத்தியோகத்தர்களின் வகுப்பு 1 க்கும் விசேட வகுப்புக்கும் உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு சம்பள முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

03. ஆகையால் 1994.06.30 ஆந் திகதியில் நடுத்தர ஒன்றிணைந்த தொழில்நுட்ப சேவையின் 11 "அ" மற்றும் வகுப்பு 1 இல் இருந்த உத்தியோகத்தர்களை 1994.07.01 ஆந் திகதி தொடக்கம் முறையே இலங்கை தொழில்நுட்ப சேவையின் புதிய வகுப்பு 1 க்கும் புதிய விசேட வகுப்புக்கும் உள்ளீர்ப்புச் செய்யும் போது அவர்களின் சம்பளங்கள் 1 ஆம் 11 ஆம் இணைப்புகளில் உள்ள சம்பள மாற்று அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட சம்பள அளவுத்திட்டங்களின் உரிய நேரொத்த சம்பளப்படிநிலைகளில் வைத்து சம்பள சீராக்கங்கள் செய்யப்படவேண்டும்.

04. 1994.07.01 ஆந் திகதிக்குப்பின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பு 1 க்கு அல்லது விசேட வகுப்புக்கு பதவி உயர்த்தப்படும் உத்தியோகத்தர் களுக்கு தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின்படி சம்பளங்களை தயாரிக்கவேண்டும்.

05. 1997.01.01 ஆந் திகதியிலிருந்து அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 2/97(111) இல் குறிப்பிட்டுள்ள சம்பள அளவுத்திட்டங்கள் இத்தரங்களுக்கு ஏற்புடையதாகும் என்பதுடன் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல 2/97 இன் 2 : 2 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின்படி கொடுப்பனவுகளைச் செய்யவேண்டும்.

06. 1994.07.01 ஆந் திகதியிலிருந்து நிலுவை சம்பளம் வழங்குவதற்காக போதிய அளவு நிதி ஏற்பாடுகளை, 2000 ஆண்டு மதிப்பீடுகளில் உள்ளடக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஒப்பம்: (மஹிந்த பந்துசேன)
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலு
வல்கள் அமைச்சு.